Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.30/2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW-3**

| Name | : | நேசக்குமார் | Father Name | : | ஹென்றி ஆல்பர்ட் |
|---|---|---|---|---|---|
| Village | : | செம்மங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 26 | Calling | : | தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து தனியார் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 10.03.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் எங்கள் வீட்டிலிருந்து தொழுவூர் பக்கமாக சென்றுகொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. பாப்பையன் என்பவர் சைக்கிளை நிறுத்திவிட்டு சிறுநீர் கழிப்பதற்காக இறங்கியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி Innova காரை ஓட்டி வந்து பாப்பையன் மீது

இடித்ததை நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.14 15:03:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.30/2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மதியழகன் | Father Name | : | வரதராஜன் |
| Village | : | தொழுவூர் காலனி | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 47 | Calling | : | கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை**-

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். சென்ற மாதம் தேதி மாதம் ஞாபகமில்லை. மதியம் 02.00 மணியளவில் தொழுவூர் பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்தேன். அங்கு வந்த போலீசார் விபத்து சம்மந்தமாக வரைபடம் தயார் செய்து கையொப்பம் கேட்டார்கள். போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.2 குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் பேப்பரில் என்ன விபரம் எழுதியிருந்தது எத்தனை பக்கங்கள் எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.14 15:04:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.30/2025**

Preliminary Register

Deposition of **PW- 5 LW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | அண்ணதுரை |
| Village | : | | Taluk | : | ராஜபாளையம் |
| Age | : | 32 | Calling | : | காவல் உதவி ஆய்வாளர்- தளவாய்புரம் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of May 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், தளவாய்புரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2025ம் தேதி வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்றுஅங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 பாப்பையன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று மதியம் 13.00 மணிக்கு நிலையக் குற்ற எண் 70/2025, ச/பி.281, 125(a) of BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அன்றையதினமே 14.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மதியழகன், தங்கராஜ் ஆகியோர்கள்

முன்னிலையில் சம்பவியிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவை முறையே **அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் 1 முதல் 5 வரையானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென்று தெரியவரவே இவ்வழக்கில் சம்பந்தபட்ட எதிரி ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜரானவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளேன். இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான PY 01 BG 4440 INNOVA Car ஐ மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. பாபு அவர்களுக்கு அனுப்பு வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளேன். அந்த ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ. 6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திரு. கார்த்திகேயன் மற்றம் தீபா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **விபத்து பதிவேடும் காயச்சான்றும்** பெற்றுள்ளேன். அவை முறையே **அ.த.சா.ஆ. 7 மற்றும் 8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மருத்துவர்கள் வழங்கிய கருத்துரையின்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.9 ஆக கு**றியீடு செய்யப்படுகிறது. பிரிவு 294(1)(3) Cr.P.C மற்றும் பிரிவு 330 BNSS, விதி 293 Crp 2019ன் படி மனு தாக்கல் செய்து எதிரி தரப்பில் ஆட்சேபணை இல்லை எனப் பெறப்பட்டு மருத்துவ ஆவணங்கள் மற்றும் மோட்டார் ஆய்வறிக்கை குறியீடு செய்யப்படுகிறது. எதிரிக்கு எதிரான விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

இவ்வழக்கின் புகார் கொடுப்பதற்கு 3 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது அதற்கான காரணம் புகாரிலோ போலீசார் விசாரணையிலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ. 8 ல் 10.03.2025 அன்று உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்ததாகவும் 21.03.2025 அன்று விடுவிக்கப்பட்டதாகவும் கண்டுள்ளது என்றால் சரிதான். வரைபடத்தில் கண்டுள்ள நபர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியங்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வலங்கைமான் அரசு மருத்துவரை விசாரணை செய்து விபத்து பதிவேடு எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் சம்பவயிடத்திற்கு நேரடியாக சென்று

விசாரணை செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் என்னால் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் ஏதும் பெறப்படவில்லை என்றாலும் வழக்கு ஏதும் பதிவு செய்யப்படவிலலை என்றாலும், வழக்கினை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.14 15:04:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.